ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

# இனக்குழு மருத்துவத்தில் மீன்கள்

**முனைவர் டே. வில்சன்**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
(பாரதிதாசன்பல்கலைக்கழகம்
இணைவுப்பெற்றது.)
திருச்சிராப்பள்ளி -2.

**சீ.ரேவதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
(பாரதிதாசன் பல்கலைக்கழகம்
இணைவுப் பெற்றது)
திருச்சிராப்பள்ளி -2.

**ஆய்வுச் சுருக்கம்**

மரபு வழி மருத்துவத்தை ஆவணப்படுத்தியதில் தாவரங்கள் குறித்து பதிவுகள் இடம்பெற்ற அளவிற்கு மனித சமூகத்தோடு கலந்திருந்த விலங்குகள் மருத்துவத்தில் இடம்பெற்ற பதிவுகள் குறைவாகவே உள்ளது எனலாம். அதிலும் குறிப்பாக முதுகெலும்புள்ள விலங்குகளில் செம்பாதி எண்ணிக்கையில் இருக்கும் மீன்கள் மருத்துவத்தில் இடம்பெற்ற தன்மை பரவலாக இல்லாமல் குறிப்பிட்ட இனக்குழுக்களிடையே மட்டும் காணப்படுகின்றது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடிய தமிழ்ச் சமூகம், அறிவியல் சிந்தனைகளில் ஆக்கத்துடன் சிறந்த அணுகுமுறையுடனும் இருந்துள்ளனர். நம் அக இலக்கியங்களில் காணப்படும் நெய்தல் நில வருணனையும் பரதவர் வாழ்க்கை முறையும் வருணன் மேய தீம்புனல் உலகத்தை தமிழர்கள் எவ்வாறு ஆட்சி செய்தனர் என்பதை உணர்த்துகின்றன. மீன் பிடிப்பதோடும் அதனை உண்பதோடும் மட்டும் நம் முன்னோர் நின்றுவிடவில்லை. அவற்றின் மருத்துவ குணங்களையும் ஆராய்ந்து கண்டுள்ளனர். ,இப்பூமியில் மூன்றில் இரு பங்கினைக் கொண்டுள்ள கடல நமக்குத் தரும் செல்வங்கள் கணக்கிலடங்காதனவை. இன்று உலகின் பல மொழிகளில் மீன்களைக் குறித்து எழுதப்பட்டுள்ள நூல்கள் அதிகம் கிடைத்திருக்கின்றன. அவற்றில் பெரும்பாலும் நவீன மீன் அறிவியல் செய்திகளே இடம்பெறுகின்றன. எனவே பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மீன்களைக் குறித்த நம் மக்கள் அறிந்திருந்த கருத்துகளை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திறவுச்சொல்**

இனக்குழு (Ethno), இனக்குழு விலங்கியல் (Ethno Zoology), இனக்குழு மருத்துவம் (Ethnomedicine), மானிடவியல் (Anthropology)

**முன்னுரை**

மனிதர்களை குறித்து அறிய முயலும் அறிவியல் துறையான மானிடவியல் பல்வேறு பரிணாமங்களில் இனக்குழுக்களை ஆய்வுக்குட்படுத்துகிறது. அந்த வகையில் இனக்குழுக்களின் மரபார்ந்த மருத்துவ முறைகளை ஆய்வு செய்வதே இனக்குழு மருத்துவமாகும். உணவே மருந்து மருந்தே உணவு என்ற கொள்கையின்படி வாழ்ந்த நம் மக்கள் உணவுப்பொருட்களின் மருத்துவக் குணங்களையும் கண்டுள்ளனர். இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய மூத்த குடியான தமிழர்களின் இனக்குழு மருத்துவ முறைகளை மீட்டுருவாக்கம் செய்வது அவசியமான ஒன்றாகும். வேர், கிழங்கு, இலை, பூ, காய் என தாவரங்களோடு மட்டும் நம் முன்னோர்கள் தம் ஆய்வை நிறுத்திக் கொள்ளவில்லை. உயிரினங்களின் மருத்துவக் குணங்களையும் ய்ந்திருக்கின்றனர்உலகில் பல்கி பெருகி வரும் மக்கள் தொகையினால் ஏற்படும் மனித குலத் தேவைகளும் அதிகமாகின்றது. அத்தேவைகளை அடிப்படைத் தேவைகளின் நிறைவு, சுகாதாரம் ஆகிய இரண்டாக பகுத்துக் காணமுடியும். இவற்றுள் அடிப்படைத் தேவைகள் என்பதை உணவு,உடை,உறையுள் ஆகியனவற்றின் தன்னிறைவு என்று கொண்டால் சுகாதாரம் என்பது சுற்றுச்சூழல் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவற்றை அடிப்படையாக கொண்டு அமைகின்றது. மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கேற்ப அவனது மருத்துவ அறிவும் வளர்ந்து வந்துள்ளது. மதம் சார்ந்த மூடநம்பிக்கைளை அடிப்படையாகக் கொண்டு மருத்துவம் செய்த காலம் மாறி இன்று பல அறிவியல் கண்டுபிடிப்புகளின் உதவியோடு சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. அறிவியல் அடிப்படையிலான ஆங்கில மருந்துகளின் மூலப்பொருள் இயற்கை வளமூலத்தில் இருந்தே தயாரிக்கப்படுகின்றன. எனவே இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மருத்துவப் பயன்பாடும் மருத்துவத் தொழில்நுட்பமும் இன்றியமையாததாகின்றன.

ஒரு குறிப்பிட்ட இனமக்களோடு பிற இனமக்களுக்குத் தொடர்பு இன்மையால், ஒவ்வொரு இனத்திற்கும் அவர்களுக்கே உரிய ஒரு மருத்துவ முறை காணப்பட்டது. பிற்காலத்தில் ஏற்பட்ட தொலைத்தொடர்பு வசதிகளால் இன்று உலகம் முழுதும் ஏறக்குறைய ஒரு நோய்க்கு ஒரே முறையில் சிகிச்சை அளிக்கும் வழக்கம் காணப்படுகிறது. எனினும் வளர்ந்து வரும் நவீன ஆங்கில மருத்துவ முறையில் கால்நடைகள் மற்றும் மனிதர்களை குணப்படுத்தும் மருந்து கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான இயற்கை உயிர்மூலங்களை கண்டறிய உலகெங்கும் பரவி இருக்கும் பல்வேறு இனக்குழுக்களின் மரபார்ந்த மருத்துவ அறிவு முக்கியப் பங்காற்றுகிறது. இன்றைய சூழலில் மருத்துவத்துறையில் தீய விளைவுகளை ஏற்படுத்தாத நவீனத்தைக் கைகொள்கிறதோடு மரபுசார்ந்த மருத்துவ அறிவினையும் தொழில்நுட்பங்களையும் மீட்டுருவாக்கம் செய்தல் கட்டாயத் தேவைகளாகின்றன.

**இனக்குழு மருத்துவம்**

இனக்குழு அறிவியல் (Ethno Science) என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் திரள் அல்லது பண்பாட்டுக் குழு தம் சுற்றுச்சூழலில் உள்ள உயிர் மற்றும் உயிரற்ற பொருட்கள் மீது கொண்டுள்ள மரபுவழி அறிவை குறித்து அறியும் ஒர் அறிவியல் முறையாகும். இத்துறையானது இனக்குழு தாவரவியல்,( Ethnobotany) விலங்கியல், (Ethnozoology), மீனியல் ( Ethno icythyology), வானியல் ( Ethno Astrology) என்று நுணுகி ஆராயும் தன்மை கொண்டது. ஆதி மனிதர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை நடத்தியவர்கள். அவர்களின் அன்றாட வாழ்வியலில் விலங்குகள் இன்றியமையாத ஒன்றாகும். இந்த விலங்கினங்கள் குறித்து ஒரு பண்பாட்டுக் குழுவினர் கொண்டிருக்கும் அறிவியல் அறிவு சாராத மரபுவழி அறிவை ஆராய்வது இனக்குழு விலங்கியலாகும். ‘ Ethno’ என்ற சொல் ஆய்வு உலகின் அண்மைக் கால அறிமுகம். இது குறிப்பிட்ட இனத்தை அல்லது பண்பாட்டுக் குழுவைக் குறிக்கும் மானிடவியல் புலம் சார்ந்த கலைச்சொல்லாகும். மானிடவியல் பார்வையில் பண்பாட்டில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் போன்ற பாகுபாடு கிடையாது. எனவே மக்கள் திரளை வேறுபாடின்றி குறிப்பிட பயன்படுத்தப்படும் கலைச்சொல்லே ‘ Ethno’ என்பதாகும் என க.வேம்பையா குறிப்பிடுகிறார். **(இளம்பரிதி. மொ. (தொ.ஆ) 2012:254-255)**

விலங்குகள் எனும்போது பாலூட்டிகள், பறவைகள் மட்டும் குறிக்கப்படுவதில்லை. மீன்கள், பூச்சிகள், தேள், புழு, நத்தை , ஓரணுப் பிராணிகள் ஆகிய எல்லாவற்றையும் குறிக்கும் மொத்தத்தில் தாவரமல்லாத எல்லாத உயிருடைய பொருளும் விலங்குகள் ஆகும். மனிதர்களின் பண்பாட்டோடு மிக நெருக்கமான விலங்குகள் உணவு, மருத்துவம் , மந்திரம், சடங்குகள் என்று நிலைக்கொண்டுள்ளன.

உயிர்கள் தோற்றம் பெற்ற காலத்தில் நோய்களும் தோன்றியுள்ளன. மனிதன் அந்நோயினைப் போக்க தன் அனுபவத்தினால் கண்ட வழியே மருத்துவம் தோன்றிய வரலாறாகும். உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே உணவு பழக்கம் வேறுபடுவது போன்று நோய்களுக்கான மருத்துவ முறைகளும் இனக்குழுக்களிடையே வேறுபடுகிறது. ஆனால் எல்லா இனக்குழுக்களிலும் அனுபவ அறிவினால் கண்ட மருத்துவ முறை ஒன்று கட்டாயம் காணப்படகின்றது. இதனை ஆய்வுக்குட்படுத்துவதே இனக்குழு மருத்துவமாகும். இனக்குழுக்களிடையே காணப்படும் மரபு வழி மருத்துவத்தை அறிவது இன்றைய நவீன மருத்துவத்திற்கான அடிப்படை ஆதாரமுமாகும். ஏனெனில் நவீன மருத்துவத்திற்கான மூலங்கள் இயற்கையிலிருந்தே பெறப்படுகின்றது. இன்று பல்கி பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உருவாகும் புது புது நோய்களுக்கான மருந்துகளை கண்டறிவதில் ஆதி மனித இனத்தின் அனுபவ அறிவும் தேவையாகின்றது. எனவே, இனக்குழு மருத்துவம் குறித்த ஆய்வுகள் இன்றியமையாதனவாகும்.

**இனக்குழு மருத்துவ ஆய்வின் சிக்கல்கள்**

இந்தியப் பழங்குடிகளிடம் காணப்படும் மருத்துவம் மந்திரம் சடங்குகளோடு இணைந்து காணப்படுகின்றது. அனைத்து விதமான மருந்துகளையும் சில மந்திரங்களை கூறிக் கொடுக்கும் பழக்கம் அவர்களிடம் உண்டு. மருத்துவம் மற்றும் மந்திர் போன்றவை வெளியில் சொன்னால் பலிக்காது என்று பழங்குடிகளிடம் ஒரு நம்பிக்கை இருப்பதால் இனக்குழு மருத்துவ ஆய்வில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு தெலுங்கானா மாநிலத்தில் வருடந்தோறும் நடைபெறும் **”மீன் பிரசாதம் ”** வழங்கும் நிகழ்வு.

ஹதராபாத் நகரில் வருடந்தோறும் “மிருகசீரிஷ கார்த்திகை” நாளில் ஆஸ்துமா நோயாளிக்கு மீன் பிரசாதம் எனும் பெயரில் மருந்து வழங்கப்படுகின்றது. பாந்தினி கௌடு குடும்பத்தார் சுமார் 170 வருடங்களாக மரபு வழியாக இந்த மருத்துவத்தை செய்கின்றனர். விரல் நீளம் அளவில் உயிருள்ள விரால் மீனின் வாயில் இவர்கள் தயார் செய்து வைத்திருக்கும் மூலிகை மருந்தினை வைத்து நோயாளிகளுக்கு சாப்பிடத் தருகின்றனர். வருடத்திற்கு ஒரு முறை வழங்கப்படும் இந்த மீன் பிரசாதத்தை சாப்பிட இந்தியா முழுமையிலும் இருந்து மக்கள் வருகின்றனர். இதற்கு உதவியாக எல்லா முன்னேற்பாடுகளை தெலுங்கானா மாநில அரசு செய்து தருகின்றது. மீன் பிரசாதத்திற்கான மீன்களை அம்மாநில மீன் வளத்துறை நோயாளிகளுக்கு விற்பனை செய்கிறது. நோயாளிகள் வாங்கி வரும மீனில் மருந்தினை வைத்து தருவது மட்டுமே அக்குடும்பத்தினர் செய்கின்றனர். அம்மருந்தினை மக்களுக்கு இலவசமாக பல தலைமுறைகளாக வழங்கி வருகின்றனர். இந்த நிகழ்விற்கான போக்குவரத்து வசதி தொடங்கி எல்லா முன்னேற்பாடுகளையும் அரசாங்கம் செய்து தருகிறது.

நோயைக் குணப்படுத்த உணவில்லாத ஒரு பொருள் வழங்கப்படும் போது அதில் உள்ள மூலக்கூறுகளை நோயாளிக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதே மருத்துவ நியதி. கௌடு குடும்பத்தார் 1845 –ல் முனிவர் ஒருவர் தங்கள் மூதாதையருக்கு சொல்லிக்கொடுத்த மருத்துவ முறை என்றும் அதை நாங்கள் வெளியில் சொல்ல தடைசெய்யப்பட்டவர்கள் என்றும் அந்த மருந்தின் மூலக்கூற்றினை இந்திய மருத்துவ கழகம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த போதும்கூட மீன் பிரசாதத்தில் சேர்க்கப்படும் மருந்து பொருட்கள் என்ன என்று சொல்லவில்லை. மருந்து வழங்கல் மற்றும் மந்திரச் செயல்கள் தடைச்சட்டம் 1954-ன் கீழ் மீன் பிரசாதத்திற்கு தடை வாங்க முயற்சிகள் நடந்தபோதும் மக்கள் நம்பிக்கை சார்ந்து நடைபெறும் காரணத்தினால் இன்றளவும் மீன் பிரசாதம் வழங்கும் விழா நடந்துக் கொண்டுதான் இருக்கின்றது.

சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட போதும் மருந்தின் சேர்மானங்களை வெளியில் சொன்னால் பலிக்காது என்ற நம்பிக்கையுடன் அதை சொல்ல மறுத்தது ஆச்சரியமான

ஒன்று தான். அந்த குடும்பத்தினர் இம்மருந்தினை இலவசமாக வழங்கி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நோயாளிகளில் ஒருவர் கூட இந்த மருந்தினால் பின்விளைவுகள் ஏற்பட்டதாக இது வரை எங்கும் புகார் அளிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் தான் இந்நடைமுறை இன்றும் தொடர்கிறது.

இந்தியாவில் இனக்குழு மருத்துவமும் நம்பிக்கையும் பிரிக்க முடியாத ஒன்று என்பதை புரிந்துக் கொள்ள மேற்கண்ட ஓர் எடுத்துக்காட்டே போதுமானதாகும்.மேலும் மருத்துவம் குறித்து இனக்குழுக்கள் இரகசியம் காத்தல் பொதுப்படையாக காணப்படுவதால் இது போன்ற இனக்குழு மருத்துவ ஆய்வில் சிரமங்கள் உள்ளன.

**சித்தர் இலக்கியத்தில் மீன் மருத்துவம்**

சித்தர்கள் மொத்தம் பதினெட்டு என்ற கருத்தில் ஒன்றுபட்டு "பதினெண்சித்தர்கள்" என்று கூறப்பட்டாலும் இந்தச் சித்தர்கள் யார் யார் என்பதிலும் அவர்கள் காலம் எவை எவை என்பதிலும் அவர்கள் வரலாறு குறித்தும் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன எனவே சித்தர்கள் எவர், அவர்கள் காலம் என்ன என்பது போன்ற வரலாற்றுச் செய்திகளைத் தவிர்த்து, அவர்கள் கூறியுள்ள மீன்களின் மருத்துவத்தன்மை மட்டுமே இங்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மனிதர்களின் உணவிற்காகப் பயன் படும் உயிரினங்களைச் சித்தர்கள் எவ்வாறெல்லாம் வகைப்படுத்தினர் என்பதனை கண்ணுசாமிப்பிள்ளை சுருக்கமாக, ”சித்தர்கள் உயிரினங்கனை நீர்ப்பிராணிகள் என்றும் நிலப் பிராணிகள் என்றும் இருவகைப் படுத்தியுள்ளனர். இதில்- வனப்பிராணி, குகைப்பிராணி. மஞ்சகப்பிராணி, பாதாளப் பிராணி, சீத்தல் பிராணி, வலுமூக்கு பிராணி, பாயும் பட்சிகள் மனைப்பிராணி ஆகிய எட்டு வகையான நிலப்பிராணிகளுக்கும், சீதப்பிராணி, புனல்பறவை. மறைபிராணி, மீன்கள் ஆகிய நால்வகையான நீர்ப்பிராணிகளுக்குமுரிய மருத்துவப் பண்புகளை விரிவாகக் கூறியுள்ளனர். இவற்றுள் நீர் பிராணியின் இறைச்சியானது உண்ணுவதற்கு விருப்பம் உடையதாகவும் மிருதுவாகவும், இனிப்புக் கலந்த யுடையதாக இருக்குமென்றும் நல்லபசியை உண்டாக்குவதுடன் உடலைச்செழுமையுற வைத்துக் கபத்தையும், வாயுவையும் போக்கும்” என குறிப்பிட்டுள்ளார் **(கண்ணுசாமிப்பிள்ளை, 1941:64)** . மேலும் மீன் உணவானது மருத்துவக் குணமிக்கது என்றும், இதனை உண்ணுவதால் நோய்கள் நீங்கி தேகம் செழித்து வளருமென்றும்,பித்த, கப, வாயு தொடர்பான நோய்கள் போகுமென்றும் சித்தர்கள் குறிப்படுவதாக கூறுகின்றார். சுமார் 26 வகையான மீன்களுக்குரிய மருத்துவக் குணங்களை தம் அனுபவத்தால் நன்கறிந்து, குறிப்பிட்ட சிலவகை மீன்களை உண்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும், சிவவகை மீன்களை உண்பதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் கூறியுள்ளது ஆய்வுக் சூரிய செய்தியாகும்.

**மீன்களின் பொதுவான மருத்துவ குணம்**

சித்தர்களின் பாடல்களைத் தொகுத்துக் கூறிடும் பதார்த்த குணசிந்தாமணி, பதார்த்தகுணவிளக்கம், குணபாடம், ஆகிய நூல்களிலிருந்து மீன்களின் மருத்துவக் குணங்களைப் பற்றிய பல செய்திகளை நாம் அறிந்திட முடிகின்றது. மீன்களுக்குரிய மருத்துவப் பண்புகளைக் குறிப்பிடும் போது, ஆற்று மீனுக்குரிய குணங்களையும் கிணற்று மீனுக்குரிய குணங்களையும், ஏரியில், மடுவில், குளத்தில் வாழ்கின்ற மீன்களுக்குரிய குணங்களையும் குறித்துப் பொதுப்படையானக் கருத்துக் களைச் சித்தர்கள் கூறியுள்ளனர்.

**"ஆற்றுமீன் தாதுவையுண் டாக்கும்ஐய வெப்பத்தை**
**ஊற்றும் அருசியைவிட் டோட்டுங்காண்-சாற்றுங்**
**கிணற்றுமீன் வாதகுன்மங் கீறுபித்தங் குஷ்டம்**
**பணைத்தபீலி கங்கொடுக்கும். பார்." (தியாகராசன். ஆர்,1952: 272)**

என்ற பாடலின் வழியாக சுழன்றோடும் நீர் நிறைந்த ஆற்றில் வாழக்கூடிய மீனை உண்பதால், வீரிய விருத்தியை உண்டாக்குமென்றும் சீதத்தால் ஏற்படும் சுரத்தைப் போக்குமென்றும். நாக்கிலே கரக்கும் அரோசக நீரை மாற்றுமென்றும் கூறுவதுடன், தேங்கி நிற்கும் கிணற்று நீரிலுள்ள மீனின் இறைச்சியானது, வாத நோயினையும். வயிற்று வலியையும் பித்த நோயினையும், குஷ்டநோயினையும் உண்டாக்குமென்றும் கூறப்படுகிறது. மேலும்,

**"ஓதுமடு மீனால் உலவபித் தங்கள் அறுந்**
**தாதுமே சங்கப்பந் தங்கள் உண்டா -மோதுகுளம்**
**ஆருமீன் றன்னால் அழற்பிணீமந் தந்தீரும்**
**ஏரி மீன் மேகம் அடும் எண்" ((தியாகராசன். ஆர்,1952: 273)**

எனும் பாடலால். மடுவில் வாழ்கின்ற மீனுக்கு வாயு தொடர்பான வியாதிகளையும், சித்தப்பிரமையையும், பித்தத்தையும் நீக்கும் திறன் உண்டென்னும் தாது விருத்தியாகு. மென்றும் கூறப்படுகிறது. பிரமேகம் என்ற மேக நோயினையும் சபநோயினையும் உண்டாக்குமென்றும் உணவு சரியாகச் செரிக்காமல் வயிறு மந்தமடையும், என்றும் சொல்லப்படுகின்றது. ஆனால் ஏரியில் வாழ்கின்ற மீனுக்கு மேக நோயினைப் போக்கும் குணமுண்டு எனவு குளத்து மீனால் வயிற்று நோய் நீங்கு மென்றும்,சுரம், போகுமென்றும் கூறப்படுகிறது.

மேலும் கடலில் வாழ்கின்ற சுறா மீன், திருக்கை மீன், உல்லமீன், கருவெளவால்மீன் வெள்ளை வெளவால் மீன், கற்றாளை மீன், கிழங்கான் மீன். கெளிறுமீன், கொள்ளிக் கருவாடு (கோலா மீன்), சுரும்புமீன், மடவைமீன், நெய்த்தோலிமீன், வாளை மீன், (ஓலை வாளைக்கருவாடு;) விலாங்கு மீன் முதலான மீன்களுக்கும், ஆறு, குளங் களில் வாழுகின்ற மீன்களான அயிரை, உழுவை, குறவை, கெண்டை, சன்னகெண்டை. சேல் கெண்டை,

சிற்றாரால், பேராரால், வரால், வாளை முதலான மீன்களுக்குமுரிய மருத்துவக் குணங்களை நன்கறிந்து சித்தர்கள் தம் பாடல்கள் வழி விளக்கியுள்ளனர். அவற்றுள் மீன்களின் மருத்துவ குணங்கள் மற்றும் முறைகள் இக்கட்டுரையில் விளக்கப்பெறுகிறது.

**திருக்கை மீன் மருத்துவம்**

இசைச் செருக்குடையாரையும் திருத்துகின்ற மொழியில் வல்ல பெண்ணே என விளித்து, திருக்கை மீனை உண்ணுபவர்களுக்கு. வாத தாதுவும் சுக்கில தாதுவும் உடலில் அதிகரிக்குமென்றும் பித்தநோய், சோபம் இவை நீங்குமென்றும் கூறிடும்.கீழ்வரும்,

**” வாதமொடு தாதுவளர்ந் துள்ளே சேருமென்றும்**
**ஓது பித்தஞ் சோபம்இவை யோடுமென்றுங் - கீதச்**
**செருக்கையடை வாரைத் திருத்துமொழி மாதே**
**திருக்கைமீன் உண்பவர்க்குச் செப்பு."**
**(காசிம் முகையதீன் ராவுத்தர்,1926: பா:எண்:938)**

எனும் பாடல் திருக்கை மீனுக்குரிய மருத்துவக் குணங்களைக் கூறுகின்றது. காமவர்த்தினி. சோபநாசினி ஆகிய பெயர்களும் இம்மீன்களுக்கு உண்டென்று சொல்லப்படுகின்றது . தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு பால் சுரப்பு நன்றாக இருப்பதற்காக பிரசவ கால பத்திய உணவாக தமிழகமெங்கும் பரவலாக பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

திருக்கை மீன்களின் வழவழப்பான மென்சவ்வை சின்னம்மை நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட தோல் பகுதிகளில் மருந்தாக தடவும்பழக்கம் இந்தியாவின் வடகிழக்கு பகுதிகளில் பரவலாக இருப்பதாக கூறப்படுகின்றது. (Das K, Choudhury 2017 7; 4(2) / 1 - 9) பழங்குடி சமூகத்தினரிடையே காணப்படும் இம்மருத்துவ முறை சித்தர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் சொன்ன மருத்துவ முறையுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

**விரால் மீன் மருத்துவம்**

கடலில் வாழும் விரால் மீனை உண்பதைத்தவிர்த்து, குளத்தில் வாழ்ன்ற விரால் மீனை உண்ணுதல் உடலுக்கு நலம்தரும் என்பதைக் கீழ்வரும்,

**"உடலை வளர்க்கும் உறுபிணியைத் தீர்க்குங்**
**குடலுக் கதிசுககங் கொடுக்குங் கடலை**
**யுழக்கும் வராலை விட்டில் ஐக்குளத்துச்**
**சேற்றை யுழக்கும் வராலதனை யுண்."**
**(காசிம் முகையதீன் ராவுத்தர்,1926: பா:எண்:938))**

என்ற பாடலானது விளக்குகிறது. குளத்து விரால் மீனை உண்பவர்களுகக்கு உடற்பிணிகள் அனைத்தும் நீங்கி உடல் நன்கு வளருமென்றும் குடலுக்கு அதிக சுகம்தருமென்றும் கூறப்படுகிறது.

**மச்ச இரத்தினம்**

பெரிய வராலமீனின் தலையிலுள்ள கல்போன்ற காதுறுப்பினைப் (earstons) பயன்படுத்தித் தயாகிக்கப்படும் "மச்சஇரத்தின அஞ்சனம்" அல்லது விரால்மீன் மை கண் நோய்களைப் போக்கிடும் என்பதைப்பின்வரும்

**"பெரிய வாரல்மீன் சுல்குங்கு மப்பூபேசும் அந்நிறையால்**
**கசியஞ்சனக்கல் துட்டிடையுங் கனக்கக்குழியில் தானிட்டுத்**
**தெரியப்புளி மாதுளைச்சாற்றில் திறமாயரைத் தேயதிலுலர்த்தி**
**அரிய பொடியைக் கண்ணிலிட அகலும்பூச்சதை அஞ்சனமே"**
**(கண்ணுசாமிப்பிள்ளை, 1941:154)** .

என்ற பாடலானது விளக்குகிறது.

விரால் மீனின் தலையிலுள்ள கல் போன்ற உறுப்பை (இதனை மச்சஇரத்தினம் என்று கூறுவர்). அதே நிறையுள்ள குங்குமப்பூ, கரியநிறமுள்ள
அஞ்சனக்கல் இம்மூன்றையும் கல்வத்திலிட்டு புளிப்பு மாதுளம் பழச்சாறு விட்டு அரைத்து உலர்த்திப்பொடியாக்கிக் கண்ணிலிட - கண்சதை, பூ ஆகியவைத் தீரும் என்று மேற்கண்ட பாடல் விளக்குகின்றது .

**அமிர்த சஞ்சீவி**

விரால் மீனின் குடற் பகுதியினை எடுத்து, அதனுடன் அதே எடையுள்ள பசு வெண்ணெயைச் சேர்த்து அதனைச் செப்புப் பாத்திரத்தில் வைத்து. அதனை வெண்கலப் பாத்திரத்தால் இழைத்து பிறகு வழித்து எடுத்து ஒரு சிமிழில் அடைத்துக்- கொள்வார். இந்த மையில் ஒரு சிறிய பயிறளவு எடுத்துக் கண்ணில் தடவிவர கண்ணில் ஏற்படும் படலம். குந்தம். நாக படலம், கழலை, ஆணிப்பூ இவைகள் குணமாகும் என்று சித்த்ர்கள் குறிப்பிடுகின்றனர். இம்மருந்தினை "அமிர்த சஞ்சீவி" என்று கூறும் கீழ்வரும்.-

**"நலமுடன் வரால்மீன் இரைக்குடல் தன்னை நன்னிரைஆ வெண்ணெயதனை**
**நன்மையாம் மதுரைக்கலந்த தனிலமைத்து நல்முறிச் செம்பதாவிழைந்துப்**
**பெலமுடன் வழித்துச்சிமிழ் தனிலடைத்துப் பேணிநீமை தனைக் குறித்துப்**
**பிரியமாய்ச் சிறிய பயறள வெழுதிப் பிணியாளர் கண்ணினை விரித்து –**
**வலமதாய்**
**நீயும்மதிமுகம் நோக்கி வரிசையாய்ப் பாக்குமப் பொழுதில்-வசைகெடவந்த**

**படலமுங்**

**குந்தம் மருவியதாக மாம்படலம் குலமதாங் கழலை ஆணிப் பூமுதவாய்க்**

**குடியொடுங்**

**கடிகை நாலாறில் குணமுள வமிர்தாஞ் சீவியெனும் பேர்கூறினர் மலை**

**முலிதெரிந்தே" (கண்ணுசாமிப்பிள்ளை, 1941:155)** .

என்ற பாடல், விரால் மீன் மையின் குணங்களை விவரிக்கின்றது.

இதேபோன்று உத்திரபிரதேச மாநில தேவிபட்டான் பகுதியைச் சேர்ந்த மக்கள் விரால் மீனிலிருந்து எண்ணெய் தயாரித்து கண் சார்ந்த பிரச்சனைகளுக்கு மருந்தாக பயன்படுத்துவது (Prakash S, 2020;5(5):222-227) ஒப்பு நோக்கத்தக்கது.

டார்ஜிலிங் மலைவாழ் பழங்குடியினர் விரால் மீன் பித்தப்பையினை மலேரியா நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். அந்நோயால் பாதிக்கப்பட்டவர் தினமும் இரண்டு வேளை விரால் மீன் பித்தப்பையினை சாப்பிடுகின்றனர். (Soni C.2020;41(14):9-18. 75).

இது போன்று சித்தர் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள மீன் மருத்துவத்தை இந்தியப் பழங்குடிகளின் மரபுவழி மீன் மருத்துவத்துடன் நம்மால் ஒப்பு நோக்கி காண முடிவது நமது மரபு வழி மருத்துவத்தின் சிறப்பை காட்டுகிறது.

அட்டவணை 1 பதார்த்த குணசிந்தாமணி மற்றும் பதார்த்த குணபாடம் விளக்கும் மீன்களின் மருத்துவ குணங்கள்

| வ. எண் | மீன் வகை | குணமாக்கும் நோய்கள் | சான்றெண் |
|---|---|---|---|
| 1. | சுறா | வாதம்,கபம்,குடல்வாதம் | (தியாகராசன். ஆர்,1952: 268) |
| 2. | வெள்ளை வெளவால் | பித்தம், கரப்பான் | (காசிம் முகையதீன் ராவுத்தர்,1926: பா:எண்:943) |
| 3. | கிழங்கான் | எல்லா நோய், மலச்சிக்கல் | (தியாகராசன். ஆர்,1952: 272) |
| 4. | சுரும்பு | தாத விருத்தி | (காசிம் முகையதீன் ராவுத்தர்,1926: பா:எண்:940) |
| 5. | வாளை கருவாடு | பித்த நோய், வாத நோய், வயிற்று நோய் | (தியாகராசன். ஆர்,1952: 267) |
| 6. | அயிரை | அருசி (ருசியற்ற தன்மை | (காசிம் முகையதீன் ராவுத்தர்,1926: பா:எண்:922) |
| 7. | உழுவை | குடல் நோய், மலச்சிக்கல் | (தியாகராசன். ஆர்,1952: 266) |

| | | | |
|---|---|---|---|
| 8. | குறவை | காசநோய், அருசி, மலக்கட்டு | (காசிம் முகையதீன் ராவுத்தர்,1926: பா:எண்:921) |
| 9. | சன்னக் கெண்டை | கரப்பான், புண், கொடிய கப நோய் | (காசிம் முகையதீன் ராவுத்தர்,1926: பா:எண்:925) |

**முடிவுரை**

இந்திய மீனவ பழங்குடியினர் மரபு வழியாக பின்பற்றப்படும் மீன் மருத்துவம் தனித்துவமானது. இலை, பூ, காய் என தாவரங்கள் குறித்த மரபு வழி மருத்துவம் அளவிற்கு மீன் மருத்துவம் பரவலாக ஆவணப்படுத்தவில்லை. தமிழில் காணப்படும் சித்தர் பாடல்கள் வழி மீன்கள் குறித்த இனவியல் அறிவு சார் மருத்துவமுறையை அறியமுடிகின்றது. இனக்குழு மருத்துவம் என்பது தங்களுக்கு கிடைக்கும் வளங்களை அடிப்படையாகக் கொண்டது. எனவே, இத்தகைய மரவுவழி மருத்துவ நடைமுறைகளின் ஆய்வு உயிரினங்களின் பன்முகத்தன்மை பற்றிய தகவல்களை வழங்குகிறது, மேலும் பழங்குடி மக்களின் பாரம்பரிய அறிவு இயற்கை உயிரியல் வளங்களின் நிலையான பயன்பாடு மற்றும் மேலாண்மைக்கு வழிவகுக்கும். இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சிக்கும் சரி மனித குல மேம்பாட்டிற்கும் பாரம்பரிய மருத்துவ அறிவு மேலாண்மை அவசியமான ஒன்றாகும். சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற மரபுவழி மருத்துவத்தில் கூட மீன்கள் குறித்த மருத்துவ பயன்பாடு நடைமுறையில் குறைவாக உள்ளது. அதனை வெளிக்கொணரும் ஆய்வுகள் அவசியமானதாகும்.

**துணைநூற்பட்டியல்**

**நூல்கள்**


1. **கண்ணுசாமிப்பிள்ள.சி, பதார்த்த குணவிளக்கம் (தாது-ஜீவ வர்க்கம்), பி. இரத்தின நாயகர் சன்ஸ். திருமகள் விலாச அச்சு நிலையம், சென்னை, 1941.**
2. **காசிம் முகையதீன் ராவுத்தர, பதார்த்த குண சிந்தாமணி (மூலமும் உரையும்) பு. அ. வேங்கடேச நாயக்கர் மாறன் அச்சுக்கூடம், 1926**
3. **தியாகராசன், ஆர்.,குணபாடம் (தாது- சீவ வகுப்பு), தமிழ்நாடு அரசினர் வெளியீடு, சென்னை, 1952.**

**ஆய்விதழ்கள்**

1. Das K, Choudhury S, Chanreila K, Nonglait L. Zootherapy among the Ethnic groups of North Eastern region of India- A Critical Review, Journal of Critical Reviews 2017 7; 4(2) / 1 - 9
2. 2.Prakash S, Yadav DK. Medico-ethnozoological studies on anamniotes fauna of Devipatan division of Uttar Pradesh, India. International Journal of Zoology and Applied Biosciences 2020;5(5):222-227.
3. Soni C. Dawa B, Rujas Y, Yuvraj G. Ethnozoological practices among the inhabitants of Darjeeling hills of West Bengal. Uttar Pradesh Journal of Zoology 2020;41(14):9-18. 75